செய்தி வெளியீடு எண்: 029 நாள்: 05.01.2018

**போக்குவரத்து தொழிலாளர்களுக்கான 13 வது ஊதிய ஒப்பந்த சுருக்கக் குறிப்பு.**

----------

போக்குவரத்து கழகங்களின் 13 வது ஊதிய ஒப்பந்த பேச்சு வார்த்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க 04.01.2018 அன்று நடைபெற்றது. இந்த பேச்சு வார்த்தையில் கடந்த 16 மாதங்களாக என்னுடைய தலைமையில் (போக்குவரத்துத்துறை அமைச்சர்) 11 முறையும் துணைக் குழு மூலம் 12 முறையும் ஆக மொத்தம் 23 முறை பேச்சுவார்த்தை நடைபெற்றது. முதலில் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்தம் எனவும் இந்த ஒப்பந்தத்தில் அடிப்படை ஊதியம் 2.35 மடங்கு உயர்த்தலாம் என்ற உத்தேசத்துடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதனை தொழிற் சங்கங்கள் ஏற்றுக் கொள்ளாததால் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்தம் எனவும் அடிப்படை ஊதியம் 2.44 மடங்கு உயர்த்தப்படலாம் என்ற அடிப்படையில் பேச்சு வார்த்தை தொடர்ந்தது. ஆனால் சில தொழிற்சங்கங்கள் அதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக அரசு ஊழியர்களுக்கு இணையாக அடிப்படை ஊதியத்தினை 2.57 மடங்கு உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.

2. 2013 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஊதிய ஒப்பந்தத்தில் 5.5% என்ற அடிப்படையில் ஊதிய உயர்வு ஏற்பட்டதையும் சேர்த்து கணக்கிட்டால் 2.44 மடங்கானது அரசு ஊழியர்களுக்கான 2.57 மடங்கிற்கு இணையானதாகும். மேலும், அரசு ஊழியர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் ஊதியக்குழு மூலம் ஊதிய உயர்வு வழங்கப்படுகிறது. ஆனால் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை என்பது நடைமுறையில் உள்ளது.

3. போக்குவரத்து கழகங்களின் தற்போதைய கடுமையான நிதி நெருக்கடியிலும், போக்குவரத்து கழக தொழிலாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு 2.44 மடங்கு மற்றும் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்தம், என்ற அடிப்படையில் 04.01.2018 அன்று ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. 2013–இல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு குறைந்தபட்ச ஊதிய உயர்வு ரூ.1468/–ம் அதிகபட்ச ஊதிய உயர்வு ரூ.2077/–ம் வழங்கப்பட்டது. ஆனால், இந்த ஒப்பந்தத்தில் ஒரு தொழிலாளிக்கு குறைந்த பட்சமாக 2684 ரூபாயும், அதிகபட்சமாக 11,361 ரூபாயும் என்ற அளவில் போக்குவரத்து துறையில் இதுவரை இல்லாத அளவில் மிகச் சிறந்த ஊதிய ஒப்பந்தத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஆண்டுக்கு சுமார் 1000 கோடி ரூபாய் அரசு போக்குவரத்து கழகங்களுக்கு கூடுதல் செலவினம் ஏற்படும்.

4. இது மட்டுமல்லாமல் 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை பணி நிரந்தரம் செய்யப்பட்டவர்களுக்கு கடந்த ஊதிய ஒப்பந்தப் பலனான 5.5% கிடைக்காததால், இவர்களுக்கு 3% சிறப்பு ஊதிய உயர்வு வழங்க இந்த ஒப்பந்தத்தில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது.

5. இனிவருங் காலங்களில் பணியில் சேரும் (Entry Level) ஓட்டுநர்களுக்கு ரூ.16,800/- என்ற சம்பள விகிதம் என உத்தேசித்திருந்ததை உயர்த்தித் தருமாறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்ததை ஏற்றுக்கொண்டு ரூ.900/- உயர்த்தி ரூ.17,700/- என முடிவு செய்யப்பட்டுள்ளது. இது போலவே நடத்துநர்களுக்கு ரூ.17,500/– எனவும், தொழில் நுட்ப பணியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களுக்கு ரூ.18,000/– எனவும் உயர்த்தி முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஊதிய ஒப்பந்தத்தை தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்ட போதிலும், சில தொழிற்சங்கங்கள் வேண்டுமென்றே திசை திருப்பி தொழிலாளர்களை போராட்டத்தில் ஈடுபட வைத்துவிட்டனர்.

6. இது தவிர கடந்த 15 ஆண்டுகளாக வழங்காமலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான நிலுவைத் தொகையாக இந்த நிதி ஆண்டில் மட்டும் ரூ. 1400 கோடியும், பணியிலுள்ள தொழிலாளர்களுக்கு ரூ. 292 கோடியும், விபத்து இழப்பீடாக ரூ.485 கோடியும் ஆக மொத்தம் 2177 கோடி ரூபாய் உட்பட கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் இதுவரை 8988 கோடி ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியுள்ளது.

7. எனவே போக்குவரத்து கழகங்களின் கடும் நிதி நெருக்கடிக்கிடையிலும், போக்குவரத்து கழக ஊழியர்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஏற்படுத்தியுள்ள இந்த மிகச் சிறந்த ஊதிய உயர்வை ஏற்றுக்கொண்டும், பொது மக்கள் மற்றும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டும், போக்குவரத்து தொழிலாளர்கள் அனைவரும் அமைதியான முறையில் பணிக்குத் திரும்ப வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

8. போக்குவரத்து கழகம் என்பது, மக்களுக்கு சேவை செய்யும் நிறுவனம். அதில் பணியாற்றுபவர்களும் சேவை மனப்பான்மையுடன் பணியாற்றிட வேண்டும். ஆனால் சில தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் என்று கூறி பேருந்துகளை நள்ளிரவு என்று கூட பார்க்காமல் நடுரோட்டில் நிறுத்திவிட்டு சென்றுவிட்டனர். இதனால், பொது மக்களும் குறிப்பாக பெண்களும், குழந்தைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பொது மக்களின் சிரமங்களை உணர்ந்து பல்வேறு தொழிற்சங்கங்கள் பேருந்துகளை இயக்க முன்வந்தபோது, அவர்களை அச்சுறுத்தும் நோக்கத்தோடு தாக்கியும், பேருந்துகள் மீது கற்களை வீசி பேருந்துகளுக்கு கடும் சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளனர். இது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும்.

9. போக்குவரத்து தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு கனிவுடன் பரிசீலித்து வரும் நிலையில், அவர்களின் ஊதிய உயர்வு குறித்த நியாயமான

கோரிக்கைகளையும், அரசு ஏற்றுக்கொண்டிருந்தும், இவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு பொது மக்களுக்கு இடையூறு அளிப்பது மிகவும் வேதனையளிக்கின்றது. சென்னை உயர்நீதிமன்றமும், இந்த வேலைநிறுத்தம் சட்டத்திற்கு புறம்பானது என்றும், அதில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் போக்குவரத்து ஊழியர்கள் உடடினயாக பணிக்கு திரும்ப வேண்டும் என்றும் உத்திரவிட்டுள்ளது. எனவே, தேவையற்ற இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிற் சங்கங்களும், தொழிலாளர்களும் உண்மை நிலையை உணர்ந்து, உடனடியாக உயர்நீதிமன்ற உத்திரவின்படி பணிக்கு திரும்ப வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தால் அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடடிவக்கையை அரசு எடுக்க தயங்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9